DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : நாகராஜ் | Father/Husband Name : செல்வராஜ் |
| Age : 30 | Village : தா.கோட்டையூர் |
| Taluk : | Calling : தனியார் நிறுவனத்தில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Oct 13, 2025 12:37 PM

(Accused Present)

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் தா.கோட்டையூரில் குடியிருந்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன்.

2. நானும், எனது ஊரை சேர்ந்த மாரீஸ்வரன் என்பவரும் சாப்பாட்டு நேரம் முடிந்து மாலை சுமார் 03.45 மணியளவில் வசந்த நகர் செல்லும் வழியில் மடத்துப்பட்டி செல்லும் சாலையில் வைத்து சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்த போது போலீசார் என்னிடம் சாட்சிக்காக கையொப்பம் கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரானது போலீசார் சம்பவ இடத்தில் தயார் செய்தது தானா என்றால் அப்போது நடைபெற்றது எனக்கு ஞாபகம் இல்லை. நான் கையொப்பம் செய்த வருடம் கடந்த 2020ம் வருடமாகும். (<u>பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>

3. என்னிடம் கையெழுத்து வாங்கிய தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் வீட்டில் வைத்து கையெழுத்து வாங்கினார்களா அல்லது காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் விபத்து நடந்த இடத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் இரவு நேரத்தில் கையெழுத்து வாங்கவில்லை என்றாலும், பகலில் தான் வாங்கினார்கள் என்றாலும் சரிதான். நான் காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றாலும் வழக்கிற்காக சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Oct 13, 2025 12:44 PM

Judicial Magistrate 2, Sattur